**<u>இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின்(பொது)</u>**

**<u>செயல்முறைகள் ஆணையிடுபவர்: திரு.ப்பி.விஜயராகவன், B.Com,</u>**

<u>ந.க.அ3/10251/2023</u> <u>நாள்: 28.12.2023</u>

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதி – இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகு – பதிவறை எழுத்தருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கி பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்க: தொடர்புடைய ஆவணங்கள்

***

<u>ஆணை:-</u>

இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகில், கீழ்க்கண்ட பதிவறை எழுத்தருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் தற்போது பணிபுரியும் அலுவலகம் | இவ்வாணையின் மூலம் பணிநியமனம் செய்யப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1. | திரு.ப்பி.லோகேஸ்வரன், பதிவறை எழுத்தர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராணிப்பேட்டை என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கி | இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் "பி" -பிரிவில் இளநிலை வருவாய் ஆய்வாளராக காலியாக உள்ள பணியிடத்தில் நியமிக்கப்படுகிறார். |

2. புதிய பணிநியமனம் மற்றும் பணிநியமன மாறுதல் குறித்து எவ்வித முறையீடுகளோ அல்லது விடுப்பு விண்ணப்பங்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. புதிய பணியிடத்தில் உடனடியாக சேரவில்லை எனில் அரசு விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும்.

4. அரசு கடித எண் 53280/வருவாய்/பணி.1 துறை/2004-1, நாள்:05.05.2006-ன்படி பணியேற்பிடை காலத்திற்கு பிறகு காலதாமதமாக பணியில் சேர்ந்த நாட்களை அடிப்படை விதிகளின் விதி 108-ன்படி அசாதாரண சம்பளமில்லாத விடுப்பாக பாவித்து ஆணையிடப்படும்.

ஒம்/-ப்பி.விஜயராகவன்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது),
இராணிப்பேட்டை மாவட்டம்.

/உத்தரவுப்படி/

28.12.23
அலுவலக மேலாளர்(பொது).

பெறுநர்:
சம்மந்தப்பட்ட நபர்.
நகல்: அ3- இருக்கைக்கு.

28/12/23

**இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின்(பொது)**

**செயல்முறைகள் ஆணையிடுபவர்: திருப்பி.விஜயராகவன், B.Com.,**

**ந.க.அ3/11583/2024** **நாள்:22.10.2024**

**பொருள்:** பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பு – இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகு – திருப்பி.லோகேஸ்வரன்., என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது- பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

**படிக்க:** இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/10251/2023, நாள்: 28.12.2023.

********

**ஆணை:-**

இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.ப்பி.லோகேஸ்வரன், என்பவருக்கு மேலே படிக்கப்பட்ட செயல்முறைகளின் படி பதிவறை எழுத்தர் பதவியில் இருந்து இளநிலை வருவாய் ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு தனியர் 29.12.2023 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். எனவே தனியருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் **29.12.2023 முற்பகல்** பணிவரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

2) மேலும் தனியரது தகுதிகாண் பருவம் மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயித்தும் ஆணையிடப்படுகிறது.

3) இந்த ஆணை குறித்து சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது.

ஒம்/-ப்பி.விஜயராகவன்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
இராணிப்பேட்டை.

/உத்தரவுப்படி/

22/10/24

அலுவலக மேலாளர்(பொது).

பெறுநர்

சம்மந்தப்பட்ட நபர்.

நகல்:

1. இவ்வலுவலக கணக்கு பிரிவிற்கு.
2. அ3 இருக்கைக்கு.

22/10/2024